செ.வெ.எண். 29 நாள்: 08-09-2017

# தமிழ்நாடு அரசு

## வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) சேர்க்கை அறிவிப்பு

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரவும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்திடவும் மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் http//skilltraining.tn.gov.in/itia2017phase2 என்ற இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகின்றன.

தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆகஸ்ட் 2017 மாதம் முதல் தொடங்கும் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற 8-ம் வகுப்பு தேர்ச்சி, 10-ம் வகுப்பு தேர்ச்சி தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். தமிழகத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலைய விவரங்கள், தொழிற் பிரிவுகள், இவற்றிற்கான கல்வித்தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீடு ஆகியவை இணையதளத்தில் உள்ள விளக்கக் கையேட்டில் (Prospectus) தரப்பட்டுள்ளன.

மேற்கண்ட இணையதளத்தில் விண்ணப்பம் மற்றும் விளக்க கையேட்டினை விண்ணப்பதாரர்கள் பார்வையிடலாம். விண்ணப்பதாரர்கள் இணையதளத்தில் கொடுத்துள்ள அறிவுரைகளை கவனமாக படித்து புரிந்து கொண்டு விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் எந்த மாவட்டத்தில் கலந்தாய்வில் கலந்து கொள்ள விரும்புகிறார்கள் என்ற விவரம் குறிப்பிட வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் விரும்பினால் பல மாவட்டங்களில் தொழிற் பயிற்சி நிலைய சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசி தேதி: 09.09.2017 என காலஅவகாசம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

மதிப்பெண் அடிப்படையில் மாவட்ட கலந்தாய்வுக்கான நிகழ்ச்சி நிரலும் இதே இணையதளத்தில் பின்னர் வெளியிடப்படும். இணையதளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் என்ற விவரம் தரப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி நிரலின் படி மாணவர்கள் Single Window முறையில் தாங்கள் சேர விரும்பும் தொழிற் பிரிவு மற்றும் தொழிற் பயிற்சி நிலையம் ஆகியவற்றை மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வு செய்யலாம் என்ற விவரம் பேட்டை, திருநெல்வேலி அரசு தொழிற் பயிற்சி நிலைய துணை இயக்குநர்/முதல்வர் திரு.V.வேல்முருகன்,M.E.,(பொறுப்பு) அவர்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு

துணை இயக்குநர்/முதல்வர்,
அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்,
பேட்டை, திருநெல்வேலி-10